**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236193

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 04.01.2023

Accepted: 15.03.2023

Published: 01.04.2023

Citation:
Mosasrupan, Chrisdina Nirojini. "Kalinga in Sri Lankan Historiography." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 37–46.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6193

*Corresponding Author:
nirojinic@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kalinga in Sri Lankan Historiography

**Chrisdina Nirojini Mosasrupan**
*Lecturer (probationary), Department of History*
*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0000-6582-7867*

**Abstract**

Sri Lanka had foreign relations with various countries since ancient times. The Buddhist culture took root in its relations with India. The introduction of Buddhism in the BC third century was a turning point in Sri Lanka-Kalinga relations. The majority of people in Sri Lanka consider Kalinga's Odisha as their homeland. Kalinga Magha has been portrayed in Sinhalese literature as cruel and non-Kalinga, in Sri Lankan history up to the present. However, the recent discovery of the Gomarankadawala Inscription (Trincomalee District) mentions Kalinga Magha as a native of the Kalinga country. In this case, the historical relations between Sri Lanka and Kalinga must be examined. Historical evidence is important in understanding the identity of a race or the history of a society. Archaeological evidence, rather than literary evidence, is the main source of evidence for the authenticity of contemporary documents. The purpose of this study is to find out the changes in the political, economic and religious fields caused by the Sri Lanka-Kalinga relations, on this basis. This research is according to a history basis. Archeological evidence, the Mahavamsa and the Culavamsa are prime data. Other books essays and website data are the secondary data from this research is proceed.

**Key Words:** Kalinga, Sri Lanka, Gomarankadawala Inscription, Kalinga Magha, The Mahavamsa, The Culavamsa, History.

**References**

1. Bijay Kumar Swain. 2008. *The Kalinga Heritage*, Authors sprees.
2. De Silva, KM. 2004. *A History of Sri Lanka*, Gurgaon: Penguin Random House India Pvt. Ltd.
3. De Silva, KM. 1960. *History of Ceylon: From the earliest times to 1505*. 2v, Ceylon University Press.
4. Geiger,Wilhelm. 1912. *The Mahavamsa*, London: Oxford University Press.
5. Obeyesekere, Donald. 1911. *Outlines of Ceylon History*, Colombo: The Times of Ceylon.
6. Rasanayagam, Mudaliyar. C. 2003. *Ancient Jaffna*, New Delhi: Asian Educational Services.
7. Wickremasinghe & Don Martino de Zilva. 1994. *Epigraphia Zeylanica*, Vol. II, New Delhi: Asian Educational Services.
8. Wright, Arnold. 1907. *Twentieth Century Impressions of Ceylon: Its History, People, Commerce, Industries, and Resources*, Asian Educational Services.
9. Barnett & Lionel, D. 1999. *Antiquities of India: An Account of the History and Culture of Ancient Hindustan*. Atlantic Publishers & Dist.
10. Jorn Rusen. 2008. *Time and History: The Variety of Cultures*. Berghahn Books.

# இலங்கை வரலாற்றியலில் கலிங்கம்

**கிறிஸ்டினா நிரோஜினி மோசஸ்ரூபன்**
*விரிவுரையாளர் (தகுதிகாண்), வரலாற்றுத்துறை*
*கலைகலாசார பீடம்,கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**
*புராதனகாலந் தொடக்கம் இலங்கை பல்வேறு நாடுகளுடன் வெளி நாட்டுஉறவைக் கொண்டிருந்தாலும் இந்தியாவுடனான உறவில் பௌத்தப் பண்பாட்டுக் கலாச்சாரம் தோற்றம் பெற்றுக்கொண்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தசமயம் அறிமுகப்படுத்தப்பட்டமை இலங்கை – கலிங்க உறவுகளில் ஒரு அடையாளமாக இருந்தது. இலங்கையில் உள்ள பெரும்பான்மை மக்கள் கலிங்கத்தின் ஒடிசாவைத் தங்கள் தாயகமாகக் கருதுகின்றனர். இதுவரையான இலங்கை வரலாற்றில் கலிங்கமாகோன் கொடூரத்தன்மை கொண்டவனாகவும் கலிங்கரல்லாதவன் என்றபோர்வையில் சிங்கள இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளான். ஆனாலும் அண்மைக் கால புதிய கண்டுபிடிப்பான கொமரன் கடவெல கல்வெட்டில் கலிங்க மாகோன் கலிங்கநாட்டைச் சேர்ந்தவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கை – கலிங்க வரலாற்று உறவுகளை ஆராய வேண்டியுள்ளது. ஓர் இனத்தின் அடையாளத்தை அல்லது ஓர் சமூகத்தின் வரலாற்றை அறிந்துகொள்வதில் வரலாற்றுச் சான்றுகள் முக்கியமானது. இலக்கியச் சான்றுகளை விட தொல்லியற் சான்றுகள் சமகாலத்து ஆவணங்களையும் உண்மைத் தன்மையை வெளிக்காட்டுவதில் முதன்மையான ஆதாரங்களாக விளங்குகின்றன. இதன் அடிப்படையில்இலங்கை – கலிங்கத் தொடர்புகளால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமயத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்:*** *வரலாறு கலிங்கம், இலங்கை, கொமரன் கடவெல சாசனம், கலிங்க மாகோன், மகாவம்சம், சூளவம்சம்*

## அறிமுகம்

தென்னாசியாவில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கை வரலாற்றில் கலிங்கத் தொடர்புகள் விஜயன் வருகை மூலமே இடம்பெற்றுள்ளமையை மகாவம்சம் எடுத்துக்காட்டுகின்றது. கி.மு ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை கலிங்கத் தொடர்புகள் அரசியல், சமூக, கலாச்சார, வணிக ரீதியில் முக்கியம் பெற்றுள்ளன.

இலங்கை வாழ் மக்களிடம் பூர்வீக இனம், சமயம் என்பவற்றை வெளி ப்படுத்துவதில் போட்டித் தன்மைகள் காணப்படுகின்றன. இதன் பின்னணியில் வரலாற்றுண்மையை வெளிப்படுத்துவதில் தொல்லியல் சான்றுகள் முதன்மை பெறுகின்றன. கலிங்கமாகோனின் வருகை வரலாற்று இலக்கியங்களில் மிகைப் படுத்தப்பட்ட செய்திகளாகக்காணப்படுகின்றன. சிங்கள, பாண்டிய, கலிங்க இளவரசர்களுக்கு இடையே மேலாதிக்கப் போராட்டம் இடம் பெற்றமையால் “கலிங்க சாப்தம்” என்றும் அழைக்கப்படும் இக்காலப்பகுதி தொடர்பாக வெவ்வேறு வரலாற்று இலக்கியங்களும் வெவ்வேறு விதமான செய்திகளைக் குறிப்பிடுகின்றது. இலக்கியச் செய்திகளை மையப்படுத்திப் பெரும்பான்மை இனத்தவர்கள் கலிங்கமாகோனைக் கொடூரத்தன்மை கொண்டவனாகவும் கலிங்கரல்லாதவன் என்ற போர்வையில் இன்றுவரை சித்தரிக்கின்றனர். ஆயினும் கலிங்கமாகோன் தொடர்பான

கொமரன்கடவெல சாசனத்தில் கலிங்கமாகோனது பூர்வீகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கம்

இலங்கை வரலாற்றின் அரசியல், பொருளாதார சமூகப் பண்பாட்டு விருத்தியில் கலிங்கத் தொடர்புகள் முக்கியம் பெற்றுள்ளன. கலிங்கமாகோன் தொடர்பாகவும், கலிங்க உறவுகள் தொடர்பாகவும் அறியப்படாத விடயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருதல் இவ்ஆய்வுக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

## ஆய்வுப் பிரச்சினை

காலத்திற்கு காலம் வரலாற்று ஆசிரியர்களால் இலங்கை - கலிங்க உறகளில் கலிங்கமாகோன் தொடர்பில் பல்வேறு கருத்துக்களும் ஊகங்களும் முன்வைக்கப்பட்டுள்ளமை ஆய்வுப் பிரச்சினையாகும்.

## ஆய்வு முறையியல்

ஆய்வுக்குரிய முதல்நிலைத் தரவுகளாக தொல்லியற்சான்றுகள், மகாவம்சம், தீபவம்சம், பூஜாவலிய நூல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், பத்திரிகைகள், இணையத்தள செய்திகளும் இவ்ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

## ஆய்வு அணுகுமுறை

இவ்ஆய்வானது இலங்கை - கலிங்கத் தொடர்புகளைத் தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதுடன் இந்திய, கலிங்க ஆதாரங்களுடன் ஒப்பீட்டு ஆராய்கின்றது.

## ஆய்வின் முக்கியத்துவம்

கிழக்கிலங்கையில் கிடைக்கப்பெற்ற கொமரன் கடவெல சாசனத்தினூடாக இலங்கை வரலாற்றியலில் மீள்பார்வை செலுத்தி கலிங்கமாகோன் தொடர்பான வரலாற்றை மீளக்கட்டியெழுப்புதல் இவ்ஆய்வின் முக்கியத்துவமாகும்.

## இலங்கையில் ஏற்பட்ட கலிங்கத் தொடர்புகள்

கலிங்கத் தொடர்புகள் விஜயன் வருகை மூலமே இலங்கையில் இடம்பெற்றதென மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கி.பி நான்காம் நூற்றாண்டில் கலிங்க மன்னன் குஹாசிவனின் மகளான ஹேமமாலா என்ற கலிங்க இளவரசி, அவரது கணவர் தண்டகுமார, இளவரசர் தந்தாவும் இலங்கைக்கு புத்தபெருமானின் புனிதப் பல் கொண்டுவந்தமை பற்றி மகாவம்சம் எடுத்துக்காட்டுகின்றது.

கி.பி பத்தாம் நூற்றாண்டில் சிங்கள அரசுகளுடனான திருமண உறவுகளின் மூலம் இலங்கையில் கலிங்கத் தொடர்புகள் வலுப்பெற்றது. அனுராதபுர இராச்சியத்தை ஆட்சி செய்த நான்காம் மகிந்த மன்னன் (956-972) கலிங்கத்திலிருந்து ஒரு இளவரசியைத் தேர்ந்தெடுத்த செய்தியை மகாவம்சம் குறிப்பிடுகின்றது (Geiger 1912:179). நான்காம் மகிந்த மன்னனின் ஆட்சியைத் தொடர்ந்து கலிங்க ராணியின் பிள்ளைகளான ஐந்தாம் சேனா, ஐந்தாம் மகிந்த என்போர் ஆட்சியைத் தொடர்ந்தனர். ஐந்தாம் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் சோழராதிக்கம் ஏற்பட்டது.

சோழராட்சியைத் தொடர்ந்து பொலன்னறுவை இராச்சியத்தின் இறையாண்மை அதிகாரமே கலிங்க வம்சத்திடம் காணப்பட்டது. முதலாம் விஜயபாகு (1111) முதலாக பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடையும் வரை இந்த வம்சமானது மூன்று தசாப்தங்களாக நாட்டை ஆட்சி செய்தனர். முதலாம் விஜயபாகு கலிங்க இளவரசி திலோக சுந்தரியைத் திருமணம் செய்தான் (Geiger 1953:28). அவளுடைய உறவினர்கள் இலங்கையில் குடிபெயர்ந்தனர். அவளுடைய பிள்ளைகள் சிங்கள, பாண்டிய அரச குடும்பத்தவர்களைத் திருமணம் செய்தனர். பௌத்தம் அவர்களின் பொதுவான சமயமாகவும், சோழர்கள் பொது எதிரியாகவும் இருந்ததால் சிங்கள-கலிங்கபரஸ்பர உறவு வலுவடைந்தது. அவருக்கு ஐந்து பெண் குழந்தைகளைப்

பெற்றெடுத்தார். சுபத்தா, சுமித்தா, லோகநாத, ரத்னாவலி ரூபாவதி மற்றும் ஒரு மகன், விக்ரமபாகு (Obeyesekere, Donald 1911:140) திரிலோக சுந்தரியுடன், மதுகண்ணவா, பீமராஜ் மற்றும் பாலக்கரா என அழைக்கப்படும் அவளது உறவினர்கள் மூவரும் கலிங்கத்திலிருந்து அரசனின் அவையில் சேர வந்தனர்.

முதலாம் விக்ரமபாகு கி.பி 1111 இல் அரியணை ஏறினார். இவர் கலிங்க அரச குடும்பத்தைச் சேர்ந்த சுந்தரி (சுந்தரமகாதேவி) என்ற இளவரசியைத் திருமணம் செய்தார். திம்புலாகலையில் செங்குத்தான மலைச் சரிவில் பக்தர்களின் நடமாட்டம் எளிதாக்கும் வகையில் சண்டமஹாலேனா (Sanda - Maha - lena பெரிய சந்திரகுகை), ஹிருமஹாலேனா (Hiru- Maha – lena, பெரிய சூரியகுகை) ஆகியவற்றுக்கு இடையே ஒரு சாலையை மகாதேவி நிர்மாணித்தமை பற்றி திம்புலாகலை மாறா வீதிப் பாறைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அவளுடைய கலிங்க தேசத்தை கௌரவிக்கும் வகையில் கலிங்கலேனா (Klingu lena) என்று பெயரிட்டாள். கி.பி 1132 இல் விக்ரமபாகுவுக்கு பின்பு அவரது மகன் கஜபாகு அரியணை ஏறினார் (Wickremasinghe, Don Martino de Zilva, 1994: 195, 196) ராணி திரிலோக சுந்தரியின் மகளின் பேரனான முதலாம் பராக்கிரமபாகு கி.பி 1153 இல் இலங்கையின் அரசராக முடிச்சூட்டப்பட்டார் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டினார்.

முதலாம் பராக்கிரமபாகு வாரிசு இல்லாமல் இறக்க அவரது மற்றொரு மருமகன் இரண்டாம் விஜயபாகு அரியணையில் ஏறி (கி.பி 1186) நிஸ்ஸங்கமல்லவைத் தனது துணை அரசராக நியமித்தார். ஒரு வருட ஆட்சியின் பின்னர் இரண்டாம் விஜயபாகு ஐந்தாம் மகிந்த என்பவனால் படுகொலை செய்யப்பட்டார் (Obeyesekere, Donald, 1911:174, Geiger 1953:125). நிஸங்கமல்லஆட்சிக்கு வரும் வரை அவரது ஆட்சி ஐந்து நாட்கள் மட்டுமே நீடித்தது.

எதிர்காலத்தில் தனது வம்சத்தின் தொடர்ச்சியை விரும்பி, பராக்கிரமபாகு முந்தைய மன்னர்கள் செய்தது போல் சிங்கபுரத்திற்குத் தூதுவர்களை அனுப்பினார், மேலும் தனது பானாவை Bana (சகோதரியின் மகன்) இலங்கைக் கொண்டு வந்தார். பராக்கிரமபாகு இளவரசரை அரச பதவியில் முதலீடு செய்து அவரை வளர்த்து, அவரை ஆயுத அறிவியலில் திறமையானவராக மாற்றினார். (Wickremasinghe, Don Martino de Zilva 1994:183-184)

பொலன்னறுவை மன்னர்களில் முதன் முதலில் கலிங்க இரத்தம் கொண்ட மன்னர் கலிங்கத்தில் பிறந்து வளர்ந்த நிஸ்ஸங்கமல்ல ஆவார். தனது வெளி நாட்டு வம்சாவளியை மறைக்க முயற்சிக்கவில்லை. அதற்குப் பதிலாக இலங்கை சிம்மாசனத்திற்கான தனது உரிமையை சட்டப்பூர்வமாக்க பயன்படுத்தினார். மகாவம்சம் நிஸ்ஸங்க மல்லனின் ஆட்சியின் காலத்தைப் பற்றி ஒன்பது சரணங்கள் மட்டுமே விவரிக்கிறது. இருப்பினும், அவரது ஆட்சியைப் பற்றிய பெரும்பாலான தகவல்கள் அவரது காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன.

கல்பொத்த சாசனத்தின் 2-7 வரிகள் நிஸங்கமல்லனின் பிறப்புத் தொடர்பான தகவல்களைத் தருகின்றது. கி.பி 1187 இல் நிஸங்கமல்ல அரியணை ஏறினார் (Obeyesekere, Donald 1911:175). அவரது கல்வெட்டுகளில் ஸ்ரீ சங்கபோதி பராக்கிரமபாகு விரராஜ நிஸங்க-மல்ல அப்ரதிமல்லா (Siri - Sangabo Kalinga Parakrama-Bahu Viraraja Nissanka-Malla ApratiMalla in Sinhapura) என்ற அடைமொழிகளால் கௌரவிக்கப்படுகிறார். அரச பரம்பரையைச் சேர்ந்த ஜெயகோப மன்னருக்கும் பார்வதி மகாதேவிக்கும் மகனாகப் பிறந்தாரென கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (Wickremasinghe, Don Martino de Zilva 1994:115).

ஒடிசா மற்றும் இந்தியாவின் வரலாற்று ஆதாரங்களில் நிஸங்கமல்லனின் பெற்றோர் பெயர் இன்னமும் அறியப்படவில்லை. ஆனால் கல்பொத்த கல்வெட்டில் பொறிக்கப்பட்ட உருவங்கள் (இருபுறமும் ஒரு ஜோடி யானைகள் தண்ணீர் பாய்ச்சுவது போல், மலர்களை ஏந்தியபடி அமர்ந்திருக்கும் லசுமி தேவி) ஒடிசா மன்னர்களின் செப்புப் பட்டயங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் கலிங்கத்தொடர்புகள் உறுதியாகின்றன (Wickremasinghe, Don Martino de Zilva, 1994:99, Bijay Kumar Swain 2008:303).

நிஸங்கமல்லகலிங்க சுபத்ரா மகாதேவி, கங்கவம்ச கல்யாண மகாதேவி, மகன் வீரபாகு, மகள், சர்வாங்க சுந்தரி என்போருடன் அரசைப் பொறுப்பேற்றான். நிஸங்கமல்ல தனது ஆட்சியில் துறவிகள், பிராமணர்கள், குருடர்கள், ஊனமுற்றவர்கள், குள்ளர்கள், ஆதரவற்றோர், துன்பப்படுபவர்களுக்குச் சமமான செல்வத்தை வழங்கினான் (Wickremasinghe, Don Martino de Zilva, 1994:118). கலிங்க மன்னன் நிஸங்கவின் (KaliguLakinduNisaka) அறம் சார்ந்த உணர்வுளை வருங்கால மன்னர்கள் புரிந்து செயற்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது (Wickremasinghe, Don Martino de Zilva **1994:90**).

நிஸங்கமல்ல தனது பொலன்னறுவையிலுள்ள அரண்மனை சார்ந்த பகுதிகளுக்கு கலிங்க ராஜபுரா (Kalinga Royal City) என்று பெயரிட்டதை கல்பொத்த கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இது புலஸ்திபுரா (Pulastipura) என்றும் அறியப்பட்டது (Wickremasinghe, Don Martino de Zilva, 1994:163). நிஸ்ஸங்க மல்லா தனது அரண்மனை வளாகத்திற்கு அருகில் ஒரு பூங்காவை நிறுவி அதற்கு கலிங்க பூங்கா என்று பெயரிட்டார். கல்வெட்டை எழுதியவர், இந்த பூங்காவை, பிம்பிசார மன்னன் கௌதம புத்தருக்கு வழங்கிய மடாலயத்துடன் இணைக்கப்பட்ட வேலுவன (Veluvana) தோட்டத்துடன் ஒப்பிடுகிறார். (Wickremasinghe, Don Martino de Zilva, 1994:183-95). கலிங்கப் பூங்காவில் (Kalinga Park) ஆடல், பாடல் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டன (Wickremasinghe, Don Martino de Zilva, 1994:134) அவர் நாட்டிற்கு ஒரு குறுகிய தசாப்த கால ஒழுங்கையும் ஸ்திரத்தன்மையையும் வழங்கினார் (De Silva, K. M., 2004:84). பௌத்தத்தின் பக்திமிக்க பாதுகாவலராக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். கல்பொத்த கல்வெட்டில் "புத்தரின் மதத்தைச் சேர்ந்த இலங்கைத் தீவில், பிற நாடுகளைச் சேர்ந்த புத்த மதத்தைச் சேராத இளவரசர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. அவர்களுடன் சேர்ந்து குழப்பம் விளைவிப்பவர்கள் துரோகிகள் என்று அழைக்கப்படுவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது (Wickremasinghe, Don Martino de Zilva **1994:164**).

நிஸங்கமல்லவின் மரணத்திற்குப் பிறகு இடைக்கால இலங்கையின் வரலாறு தளர்வடைந்தது. நிஸங்கமல்லவின் மகன் இரண்டாம் வீரபாகுமுடிசூட்டப்பட்ட பின் கொலை செய்யப்பட்டார். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆட்சி செய்த அவரது இளைய சகோதரர் இரண்டாம் விக்ரமபாகு சோடகங்கா என்ற உறவினரால் கொல்லப்பட்டார். சோடகங்கா ஆட்சியின் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, முதலாம் பராக்கிரமபாகுவின் ராணி லீலாவதி மூன்று ஆண்டுகள் (1197-1200) ஆட்சி செய்தாள். பின்னர் கலிங்கத்தின் சிங்கபுரத்திலிருந்து மன்னர் நிஸங்கமல்லவின் ஒன்றுவிட்ட சகோதரரான சஹஸமல்லன் (1200-1202) அரியணை ஏறி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார், பின்பு கல்யாணவதி (1202-1208) ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்தாள் (Wickremasinghe, Don Martino de Zilva, 1994:117, 118).

வரலாற்றுக் காலம் முதலாக இலங்கை - கலிங்கத் தொடர்புகள் வலுப்பெற்றுள்ளதை மகாவம்சம், சூளவம்சம், பராக்கிரமபாகு மற்றும் நிஸங்கமல்லன் கால கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. முதலாம் விஜயபாகு

காலந்தொடக்கம் நிஸங்கமல்லன் வரையான வரலாறுகளில் கலிங்கத் தொடர்புகள் தவிர்க்க முடியவில்லை. சோழராட்சியிலிருந்து இலங்கையை விடுவித்த முதலாம் விஜயபாகு மன்னன் அவர்களிடமிருந்து தன் இராச்சியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாண்டிய, கலிங்க அரச வம்சத்தவர்களோடு நட்பு ரீதியாக திருமணத் தொடர்பினை ஏற்படுத்தியதை மகாவம்சக் குறிப்பால் அறியலாம். ஆட்சியுரிமை விஸ்தரிப்புக் கொள்கையால் பாண்டிய கலிங்க மோதல்கள் முதலாம் பராக்கிரமபாகுவின் பின்னரான காலத்தில் வலுப்பெற்றது. நெருக்கடியான அரசியற் குழப்பம் நிறைந்த காலப்பகுதியில் கலிங்கமாகோன் படையெடுப்பு இடம்பெற்றுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

## கலிங்க மாகோன் தொடர்பான வரலாற்றுச் சான்றுகள்

**1215** இல் பொலன்னறுவையின் இரண்டாம் பராக்கிரம பாண்டியனிடமிருந்து சிம்மாசனத்தை அபகரித்த ஒரு கலிங்க இராச்சியப் படையெடுப்பாளராவார் (Wright, Arnold 1907:38). கலிங்க மாகோனின் படையெடுப்பைத் தொடர்ந்து இலங்கையின் தெற்கு, மேற்கு மலைநாடுகளில் சிங்கள மக்களின் குடியேற்றம் ஏற்பட்டதுடன் இராச்சியங்களின் தலைநகர்களும் மாற்றப்பட்டன. இராஜரட்டை இராச்சியத்தின் இறுதி ஆட்சியாளர் மாகோன் காணப்பட்டார்.

கலிங்கமாகோனின் சரியான தோற்றம் தெரியவில்லை, இருப்பினும் அவரது பெயரின் காரணமாக, அவர் பெரும்பாலும் கலிங்கத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுகின்றனர். பண்டைய கலிங்கமானது கங்கை முதல் கோதாவரி வரையிலான கிழக்கு இந்தியாவின் பெரும் பகுதியை உள்ளடக்கியது. இது இன்றைய வடக்கில் தெலுங்கானா (Telangana), வடகிழக்கில் ஆந்திரப் பிரதேசம், ஒடிசாவுடன் தொடர்புடைய ஒரு வரலாற்று இடமாகும். ஒரிசாவின் தனித்துவமான புவியியல் நிலை, வடக்கு மற்றும் தெற்கின் சந்திப்பு, கடல் சார்ந்த அமைவிடம் என்பன கடல் கடந்த தொடர்புகளுக்குக் காரணமாகியது.

கலிங்கத்தை ஆண்ட கிழக்கு கங்கா வம்சத்தைச் சேர்ந்த (சோடகங்கா) இளவரசர் மாகோன் என்று மிகவும் பிரபலமான கருத்தும் உண்டு (டீயசநெவவ **1999:90**). கலிங்கர் சந்திரன் பரம்பரையிலிருந்தும், சோழ வம்சத்திலிருந்தும் வந்தவர்கள் (Barnett 1999:90). நீலகண்ட சாஸ்திரி கலிங்க நாடு முழுவதும் கிழக்கு கலிங்கத்தின் ஆட்சியிலிருந்தது என்கிறார்.

திருகோணமலை மாவட்டம், கொமரன் கடவெலயில் கிடைத்த பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு, மூன்றாம் குலோத்துங்க சோழனால் கலிங்க மாகாவை கங்கராஜா காலிங்க விஜயபாகு என்ற பெயரில் பொலன்னறுவையின் அரசனாகப் பிரதிஷ்டை செய்ததை நிரூபிக்கிறது (புஷ்பரெட்ணம் **2021**). அக்கல்வெட்டைப் பொறிப்பித்தவர் ஸ்ரீ குலோத்துங்க சோழ காலிங்கராயன் என்றும் இவன் ஈழமண்டலமான மும்முடி சோழ மண்டலம் எறிந்து, அதாவது இலங்கையைக் கைப்பற்றி கங்கராஜ காலிங்க விஜயபாகு தேவர் என்பவருடைய வீராபிசேகத்தையும் செய்தான் என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டு வாசகம் மேல்வருமாறு:

“..ஸ்ரீ குலோத்துங்க சோழக் காலிங்கராயநேன் ஈழஜமண்டலமான மும்முடிச்சோழ மண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிசேகம் பண்ணுவித்து” என்பதாகும்.

இலங்கை அரசியலில் ஏற்பட்ட நீடித்த நெருக்கடியானது தென்னிந்தியப் படைகளைதீவின் ஆட்சியில்தங்கள் அதிகாரத்தை

நிலைநிறுத்த இயற்கையாகவே ஈர்த்தது. இந்த நிலையில் கலிங்க மாகோன் 24,000 தமிழ் மற்றும் மலையாளி வீரர்களைக் கொண்ட பெரும் படையுடன் நாட்டின்மீது படையெடுத்தான். ஆக்கிரமிப்பாளர்களின் கொடூரம் மற்றும் காட்டுமிராண்டித்தனம் தொடர்பான செய்திகள் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன (Geiger 1912:132, 133).

"அவர்கள் குடிமக்களின் ஆடைகளையும், நகைகளையும், அவர்களிடம் இருந்த அனைத்தையும் கொள்ளையடித்து, குடும்பங்களின் கற்பை மீறினார்கள். மக்களின் கை, கால்களை வெட்டி அவர்களின் குடியிருப்புகளை சூறையாடினார்கள். அவர்களின் எருது கள், எருமைகள் மற்றும் பிற விலங்குகளை அவர்கள் வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்றனர். பணக்காரர்களைக் கயிறுகளால் கட்டி, சித்திரவதைச் செய்து அவர்களின் செல்வங்கள் அனைத்தையும் கைப்பற்றினர். அவர்கள் புதையல் தேடும் பணியில் சிலை வீடுகளை உடைத்தனர். விகாரைகளில் தங்களுடைய வசிப்பிடத்தை எடுத்துக் கொண்டு, அதில் பக்தியுள்ள பாமரர்களை அடித்தார்கள். அவர்கள் குழந்தைகளை கட்டிப்பிடித்து மதகுருமார்களை மோசமாக நடத்தினார்கள். சுமைகளைச் சுமக்கும்படி மக்களை வற்புறுத்தி, அவர்களைக் கடுமையாக உழைக்கச் செய்தனர். மிகச் சிறந்த பல நூல்கள் அவற்றைக் கட்டியிருந்த கயிறுகளிலிருந்து அவிழ்த்து அந்த இடத்தைச் அழித்துவிட்டனர்." (Obeyesekere1911:178) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புஜாவலிய என்ற நூலில் மாகோன் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. மாகோனும் ஜயபாகுவும் பொலன்னறுவையைக் கைப்பற்றி கி.பி 1215ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தனர். அவர்களின் ஆட்சி நான்காம் பராக்கிரமபாகு (1236-1270) தம்பதெனியாவில் அரசனாக வரும்வரை நீடித்தது. இவர்களுடைய காலத்தில் பெருங்குடி மக்களும் மதம் மாற்றப்பட்டதாகவும் இவ்விரு தமிழ் அரசர்களும் 40 வருடங்கள் ஆட்சி செய்தனர் என்றும் குறிப்புக்கள் வருகின்றன (Suravera.A.V. 1959: 105C114C116)

ஹத்தவங்கல்ல விகாரவம்ச என்ற நூலில் மாகன் பற்றிய மேல்வரும் தகவல்கள் காணப்படுகின்றன. பொலன்னறுவை ஆட்சி பலவீனமுற்றிருந்த காலப்பகுதியில் இலங்கையர்களின் கொடூரமான பாதகச் செயலின் விளைவாக பௌத்த நெறியை அறவே அறிந்திராத பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த பகைவரின் படைகள் தவறான மார்க்கம் என்ற புதரில் சிக்குண்டவர்'கள் ஜம்புத் தீவில் இருந்து வந்து இறங்கி ஈழம் முழுவதும் குழப்பமும் ஆபத்தும் நிறைந்த நிலைக்கு உள்ளாக்கினர் எனக் குறிப்புக்கள் வருகின்றன (Godakumbura C.E.B 1956:32). அதாவது கலிங்க மாகோன் பௌத்த சமயத்துக்கும், பௌத்த கட்டிடங்களுக்கும் ஏற்படுத்திய சேதங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

நிகாயஸங்க்ரஹய, ஸத்தர்மரத்தனாகரய நூல்களில் பொலன்னறுவையைக் கைப்பற்றிய கலிங்கமாகோனுக்கு (1215) காலிங்க விஜயபாகு என்ற பெயர் இருந்தமை தொடர்பாகவும் தென்னிந்தியப்படைகளின் உதவியோடு மாகோன் வெற்றி பெற்றான் என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன. கொமரன்கடவெல சாசனத்தில் ஸ்ரீ குலோத்துங்க சோழ காலிங்கராயன் தலைமையிலான படையின் உதவியுடன் காலிங்க விஜயபாகு (கலிங்கமாகோன்) அரசைக் கைப்பற்றி மன்னனாகினான் என்பது உறுதியாகின்றது.

சில வரலாற்றாசிரியர்கள் மாகோனை யாழ்ப்பாணத் தமிழ் நாளேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள கூழங்கையன் சிங்கை ஆரியன் என்று அடையாளப்படுத்துகின்றனர் (Sivaratnam. C., 1968:119). யாழ்ப்பாண அரசை அமைத்த ஆரியச் சக்கரவர்த்திகளும் கங்கைவம்சத்துடன்தொடர்புடையவர்கள்

என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இதனை சி.இராசநாயகம் முதலியாரும் "பொலன்னறுவையின் கலிங்க மன்னர்கள் யாழ்ப்பாண மன்னர்களின் வம்சத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்" எனக் குறிப்பிட்டுள்ளார் (Rasanayagam 2003:315). இந்திரபாலா கலிங்கமாகோன் கலிங்க இராச்சியத்தை ஆண்ட கிழக்கு கங்கை வம்சத்தைச் சேர்ந்தவர் என்கிறார்.

மட்டக்களப்பு பூர்வ சரித்திர நூலில் கலிங்கமாகோன் முக்கியப்படுத்தப்பட்டுள்ளான். இவனே இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் கலிங்கர் ஆட்சியை உறுதிப்படுத்தினான் எனவும், மட்டக்களப்பு தேசத்தின் சமூகக் கட்டமைப்பில் குலம் கோத்திரம், அவர்களது கடமைகளை வகுத்தான் எனவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கலிங்கமாகோனை படைகளுடன் இலங்கைக்கு வருகைதந்து மட்டக்களப்பில் அரசியல், சாதி, அதன் கட்டமைப்பு, அதன் கடமைகளை மீளக்கட்டியெழுப்பினான் என்பதை இந்நூல் விபரிக்கிறது. (கமலநாதன் 2005:02).

மனுவரதன் (மாகோனின் தந்தை) தன் சகோதரி மதிசுந்தரியின் மகள் அதிமதியை மாகோனுக்கு திருமணம் முடித்து வைத்ததாகவும் தினசிங்கன் சரித்திரம் என்ற பகுதியில் மாகோன் பற்றிய குறிப்புக்கள் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலுள்ளன. இத்தகவல்கள் இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சத்திலோ, வேறு வரலாற்று நூல்களிலோ குறிப்பிடப்படவில்லை. மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் தினசிங்கன் சரித்திரம், சுகதிரன் சரித்திரம், குடிப்பிரிவுகள், குளிக்கல் வெட்டுமுறை என்ற பகுதிகளில் மாகோன் தொடர்புபடுத்துகின்றான்.

மாகோன் தலைநகர் தோப்பாவையை (பொலன்னறுவை) கைப்பற்றியமை பற்றிய குறிப்புள்ளது (வெல்லவுர் கோபால் 2011:71). மட்டக்களப்பை காலிங்க குலத்து சுகிருதனுக்கு பட்டங்கட்டி பின்பு இலங்கை முற்றும் தன்வசப்படுத்தும் நோக்குடையவனாக மாகோன் செயற்பட்டான். பின்பு தோப்பாவுக்குச் சென்று மன்னன் அணிகங்கரன் என்பவனை வாளுக்கிரையாக்கி அங்கிருந்த புத்த விகாரைகள் புத்தாலயங்கள் என்பவற்றை இடிப்பித்தான் பௌத்த குருமாரைச் சிறைப்பிடித்தான், தோப்பாவையைக் கைப்பற்றி இலங்கை முழுவதையும் ஆட்சி செய்தான்.

நிஸங்கமல்லனின் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதை பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சோழ, கேரளப் படைவீரர்களின் உதவியுடன் படையெடுத்து வந்த கலிங்கமாகோன் 1215 பொலன்னறுவையைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான் எனவும் அவனது ஆட்சியில் வெறுப்புற்ற மக்கள் தெற்குநோக்கி இடம் பெயர்ந்தபோது வடக்கே இன்னுமோர் அரசு தோன்றியதாக ராஜாவலிய, சுளவம்சம் பற்றி குறிப்பிடுகின்றது. கலிங்கமாகோன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்தான்? என்பது தொடர்பில் அறிஞர்கள் மத்தியில் வாதப்பிரதிவாதம் காணப்பட்டது. ஆனால் கொமரன்கடவெல சாசனத்தில் கலிங்கமாகோன் கங்கை வம்சத்துடனும் கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்பதை உறுதியாகின்றது.

சோழர்கள் திருமண உறவுகளால் கீழைச் சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும் படையெடுப்புக்கள் மூலம் கலிங்க நாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்ததை கலிங்கத்துப்பரணி, சோழ கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. இந்நிலையில் கலிங்கமாகோனின் படையெடுப்பு முக்கியத்துவமுடையதாக அமைகின்றது.

### கலந்துரையாடலும் முடிவுரையும்

சௌரத் பரணவிதானபத்தாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான நெருங்கிய உறவு இந்தியாவிலுள்ள கலிங்கத்தால் ஏற்படவில்லை. மாறாக மலேசியாவில் அந்தப் பெயருடைய ஒரு பகுதி என்ற

கருத்தை முன்வைத்துள்ளார். பத்து மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கும் ஸ்ரீ விஜயாவுக்கும் இடையிலான உறவுகள் குறித்த ஆய்வை மேற்கொண்டபோது, இந்தக் கருத்தை ஆதரிக்கும் சில ஆவணங்களைக் கண்டுபிடித்ததாகவும் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும், 1960 இல் இக்கருத்து பரவலான விமர்சனங்களுக்கு உட்பட்டது (Bijay Kumar Swain 2008:311). ஆயினும் கொமரன்கடவெல சாசனத் தினூடாக கங்கை வம்சத்துடனும் கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்பது உறுதியாகின்றது.

இலங்கையிலுள்ள இலக்கிய மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் வரலாற்றுக் காலத் திலிருந்து கலிங்கத்திற்கும் சிங்களத்திற்கும் இடையிலான கலாச்சார, அரசியல், சமூக மற்றும் வணிக உறவைக் குறிப்பிடுகின்றன. ஆயினும் இதுவரைகாலமும் இலக்கியச் சான்றுகளால் குறிப்பிடப்பட்ட கலிங்க மாகோனுடைய வரலாற்றுத் தெளிவின்மைக்கு கொமரன்கடவெல சாசனம் முக்கியபுள்ளியாக மாறியுள்ளது.

கிழக்கு இந்தியாவில் (இன்றைய ஒடிசா மாநிலம்) ஆட்சி புரிந்தோரை கீழைக் கங்கர் என்பர். பன்னிரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பொலன்னறுவைக் கால அரசியலில் கலிங்கத்திலிருந்து வந்த கங்க வம்சத்தினர் முக்கியம் பெறுகின்றனர். நிஸங்கமல்லனின் மனைவி கல்யாணவதியும் கங்கை வம்சத்தைச் சேர்ந்தவள். நீலகண்ட சாஸ்திரியின் கருத்துப்படி கலிங்க வம்சத்தில் சோழ வம்சமும் கலப்புற்றது. சோழ மன்னனான மூன்றாம் இராஜராஜன் கலிங்க மன்னனான அனந்தவர்மன் சோடகங்கனுடைய பேரனாவான். கலிங்கர் என்போர் கங்கவம்சக் கலப்புடையோர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

கலிங்க மாகோனின் படையெடுப்பு சிங்கள அரச குடும்பத்தின் இரு பிரிவினருக்கிடையில் (முதலாம் விஜயபாகு சகோதரி மித்தா வழி வந்த பாண்டியத் தொடர்பு, முதலாம் விஜயபாகு வழி வந்த கலிங்கத் தொடர்பு) அரசாட்சியை பெற்றுக்கொள்வதில் போட்டி நிலவிய காலகட்டத்தில் நடைபெற்றது. முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியைத் தொடர்ந்து கலிங்க மற்றும் பாண்டிய வம்சங்களுக்கிடையில் கடுமையான போட்டி நிலவிய சுழலில் (Plague from Kalinga – சோழ வம்சத்துடன் இணைந்திருந்தது) கலிங்க மாகோன் இலங்கைக்கு வந்தார்.

பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழராட்சி 1070 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தாலும் சோழராதிக்கம், நிர்வாகம், பண்பாடு என்பன தமிழ்ப் பிராந்தியங்களில் தொடரப்பட்டுள்ளதை கொமரன்கடவெல சாசனத்தினூடாக அறிய முடிகின்றது. இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில் சோழராட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியாக குலோத்துங்க சோழ காலிங்கராயன் இருந்துள்ளான்.

சோழமன்னர் தங்கள் படைத் தலைவர்கள், குறுநிலமன்னர், அதிகாரிகள் ஆகியோருக்கு பொதுவாக வழங்கிய விருதுப் பெயர்களை வழங்கினர். குலோத்துங்க சோழகாடவராயன், குலோத்துங்க சோழகச்சியராயன், குலோத்துங்க சோழவாணக் கோவரையன், குலோத்துங்க சோழசாம்புவராயன், குலோத்துங்க சோழ கடாதிராயன் போன்ற பெயர்கள் எடுத்துக் காட்டுக்களாகும். கொமரன் கடவெல சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குலோத்துங்க சோழ காலிங்கராயன் என்ற பெயரும் இத்தன்மையை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது. முதலாம் குலோத்துங்க சோழனுடைய தளபதிகளுள் மிகவும் வெற்றி ஈட்டிய ஒருவனாகிய நரலோக வீரனுக்கு காலிங்கராயன் என்ற விருது வழங்கப்பட்டது (இந்திரபாலா 2021).

பொலன்னறுவை அரசு பொதுவாக சோழ அரசை எதிர்த்துப் பாண்டிய அரசுக்கு உதவிபுரிந்தது. இக்குலோத்துங்க சோழன் காலத்திலும் இந்த நிலைமை தொடர்ந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக (1178, 1218) அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. "ஈழத்தாந் முடி வாழ வாழத்தாளிணை சுட்டி... மதிரையும் ஈழமுங் கொண்டு" என திருமாணிக்குழிக் கல்வெட்டு சோழ மன்னனின் வெற்றியைப் புகழ்ந்து கூறுகின்றது. மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக்காலப் பகுதியில் கலிங்கமாகோனின் பட்டாபிசேக நிகழ்வு இடம்பெற்றிருக்க வேண்டும்.

பொலன்னறுவை அரசியலில் கலிங்க மற்றும் பாண்டிய வம்சங்களுக்கிடையில் ஆதிக்கப் போட்டி, சோழகலிங்க உறவுகள் காரணமாக பாளி வரலாற்று இலக்கியங்களிலும் சிங்கள நூல்களிலும் மாகோன் கொடூரத் தன்மை கொண்டவனாக சித்தரிக்கப்பட்டுள்ளதை உணரலாம். ஆயினும் தமிழ் வரலாற்று இலக்கியங்கள் அவனால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான செய்திகளைக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு இலங்கை வரலாற்றியலில் கலிங்க இலங்கைத் தொடர்புகளின் மாறுபட்ட விடயங்கள் கலிங்கமாகோன் வரலாற்றிலும் முக்கியம் பெற்றுள்ளது.

முதலாம் விஜயபாகு இறந்த பின்னர் அரச குடும்பத்தினரிடையே தகராறு ஏற்பட்டது. நாட்டு வழமைப்படி முன்னைய அரசனின் இளைய சகோதரனாகிய ஐயபாகுவை அரசனாக முடிசுட்டினார்கள். வழமைப்படி அச்சமயத்தில் விஜயபாகுவின் மகனாகிய விக்கிரமபாகு இளவரசனாக நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும் சங்கத்தார் சிலரினதும் உயரதிகாரிகளினதும் சூழ்ச்சியின் விளைவாக விஜயபாகுவின் மருமகனாகிய மானாபரணனை யுவராசனாக நியமித்தனர். இதனால் முடிக்குரிய இளவரசனாகிய விக்கிரமபாகுவின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன. உறுகுணையில் மண்டலாதிபதியாக அதிகாரம் பெற்றிருந்த விக்கிரமபாகு பொலன்னறுவைக்குச் சென்று மன்னனாகிய ஐயபாகுதேவரையும் தனது மைத்துனராகிய மானாபரணனையும் தம்பி மாரையும் அங்கிருந்து துரத்திவிட்டு இராச தானியையும் ஆட்சியதிகாரங்களையும் கைப்பற்றி விட்டான். இலங்கையின் வடபகுதி அவன் வசமாகியது. தக்கிணதேசம், உறுகுணை என்னும் மேற்கிலும் தெற்கிலுமுள்ள பகுதிகளை மானாபரணனும் தம்பிமாரும் கைப்பற்றிவிட்டனர். விக்கிரமபாகு தாய் வழியிலே கலிங்க வம்சத்தவன். அவன் சைவசமயச் சார்புடையவன் என்பதற்கு அவனது காலத்துச் சாசனக் குறிப்புகள் சான்றாயுள்ளன. அவன் பௌத்த நிறுவனங்களுக்கு விரோதமாக மேற்கொண்ட நடவடிக்கைகளை மகாவம்சம் வர்ணிக்கின்றது. அவன் பொலன்னறுவையினை இராசதானியாகக் கொண்டு 22 வருடங்கள் இராஜரட்டைப் பகுதியினை ஆட்சி புரிந்தான் (பத்மநாதன் 2006:139).

இலங்கையில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை அறிந்து கொள்ளும் இலக்கிய நூல்களில் மகாவம்சம் முதன்மையானதாகும். இந்நூல் பௌத்த நிறுவனங்களுக்கு விரோதமாக (இந்து சமயத்துக்கு சார்பாக) செயற்பட்ட கஜபாகு, வீரபாகு, கலிங்கமாகோன் மன்னர்களின் வரலாற்றுத் தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளதை அறியலாம். இவை இலங்கை - கலிங்க உறவுகளில் மாறுபட்ட வரலாற்றுத் தன்மையை சித்தரிக்கின்றது.